வேண்டும். அப்படியிருந்தால் நகராட்சியாக மாற்றக்கூடிய செயற்குறிப்பு இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. சில யிடங்களில் வருமானமும் நான்கைந்து லட்சமாகி, மக்கள் தொகையும் 40,000 அல்லது 50,000 என்று ஆகியும் மாற்றுமல் இருக்கிருர்கள். அப்படிப்பட்ட இடங்களில் நாமே வற்புறுத்தி நகராட்சியாக ஆனுல்தான் நகரத்திற்குரிய வசதிகளும், வாய்ப்புகளும் செய்து தர முடியும், எனவே அதை நகராட்சி யாக மாற்றும்படி நாமே வற்புறுத்த வேண்டுமென்ற கட்டம் ஏற்படும். அதுவரையில் அவர்களுடைய விருப்பம்தான் கேட்டறியப்படுகிறது.

Poultry farms for Sevilimedu Panchayat.

*335. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that a special project for poultry production is to be inaugurated at Sevilimedu in Kanchipuram ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செவிலிமேடு ஊராட்சியில் 20 கோழிப் பண்ணைகள் 10-11-1971 அன்று ஏழை மக்களின் நன்மைக்காக முன்னேடி திட்டமாக துவக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்கள் இருபது பேர் ஒரு குழுவினல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காஞ்சிபுரம் இந்தியன் வங்கி இத் திட்டத்திற்கு ரூபாய் 16,000 கடனுக முன் பணம் கொடுத்துள்ளது. தேர்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கடனுக ரூபாய் 800 (ரூபாய் எண்ணூறு) அளிக்கப்பட்டுள்ளது. இக்கடனை 12 மாத தவணையில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இது தவிர ஒவ்வொருவருக்கும் கால்நடை மானிய திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்தால் ரூபாய், 100 மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திளுல் உற்பத்தியும் மற்றும் நிலமும் கிடைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசின் மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மானியம் தரப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த செவிலி மேடுத் திட்டம் ஒரு சிறந்த வெற்றிகரமான திட்டமாக இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒவ்வொரு ஒன்றி யத்திலும் ஒரு இடத்திலாவது இது போன்ற சிறப்புத் திட்டங்கள் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப்படையிலே தான் முன்னோடித் திட்டமாக செவிலிமேட்டிலே இப்படித் திட்டம் அமைக்கப்பட்டது. அது உருவான பலன் தருமானால் அந்த மாவட்டத்திலே பல இடங்களிலும் வேறு மாவட்டங்களிலும் விரிவுப்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

அரிசனங்களுக்கு வீடுகள்

*336 வினா—திரு ந. தருமலிங்கம் :—மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு சற்று அதிகப் பரப்புளவுள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை கட்டப்பட்டு வந்த வீடுகள் 96 சதுர அடி பரப்புளவு உடையன வாக இருந்தது. நடப்பு நிதியாண்டிலிருந்து இதை 177 சதுர அடியாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, இப்பொழுது கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் எல்லாம் கணவன் மனைவிகூட வாழ வசதியில்லாத முறையில் அமைந்திருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து அகலமான வீடுகளாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைத்தான் நான் சொன்னேன். 96 சதுர அடி பரப்பளவுள்ளதாக இருந்தது இப்பொழுது 177 சதுர அடி பரப்பளவாகவும் 940 ரூபாய் வரையில் செலவழிக்கப் பட்டது இப்பொழுது 1,600 ரூபாய் வரையில் உயர்த்தப்பட்டும் இருக்கிறது. ஆகவே கூடுதலாகச் செலவழித்து அதிகப் பரப்பளவுள்ள வீடுகளைத்தான் நாம் கட்டிக் கொடுக்கிறோம்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டுக்கு முன்பு அரிசனங்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் பரப்பளவு என்ன? இப்பொழுது கட்டிக்கொடுக்கின்ற வீடுகளின் பரப்பளவு என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமான குறிப்பு அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது இல்லை.

*337 வினா—திரு இரா. இராமலிங்கம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :